# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,486—1965 අගෝස්තු 20 වැනි සිකුරාදා—1965.8.20

14,486 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III—காணிகள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள்— | |
| முன்னறிவித்தல்கள .. .. .. | — |
| இறுதிக் கட்டளைகள் .. .. .. | — |
| அரசாங்க அதிபர்களினூற் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| நிர்ணய உத்தியோகத்தர்களின் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் .. .. .. | — |
| மத்திய மாகாணம் .. .. .. | — |
| தென் மாகாணம் .. .. .. | — |
| வட மாகாணம் .. .. .. | — |
| கீழ் மாகாணம் .. .. .. | — |
| வடமேல் மாகாணம் .. .. .. | — |
| வடமத்திய மாகாணம் .. .. | — |
| ஊவா மாகாணம் .. .. .. | — |
| சபரகமுவா மாகாணம் .. .. | — |
| காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள் .. | 385 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் .. | — |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் .. .. | — |
| நாணுவித காணி அறிவித்தல்கள் .. .. | 392 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் .. | — |


## காணி கொள்வனவுபற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

**பிழை திருத்தம்**

6.11.64 ந் திகதிய 14,216 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 5 ம் பிரிவின் படியான பிரகடனத்தில் குறிப்பிட்டிருக்கும் நுவரெலியா மாவட்டம் கொத்மலே காரியாதிகாரியின் பகுதி மாவெல கிராம சேவகரின் பிரிவிலுள்ள மெடகும்புற என்னும் சுமார் 1ஏ. 2று. 00பே. விசாலமுள்ள துண்டுக் காணியின் எல்லைகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வடக்கு : மாஸ்வெலேயிலிருந்து புசல்லாவைக்குப் போகும் டி. ஆர். சி. ஒற்றையடிப் பாதையும் அம்பககா கும்புறையும் (பகுதி) ;
கிழக்கு : அம்பககா கும்புற ;
தெற்கு : மகாபலகப்புவ கும்புற ;
மேற்கு : ஹீன்பலகப்புவ கும்புற.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

குறிப்பு இல. ஜே 63/64 ஈ 430
2/11/235/64

8—567—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

## முக்கிய விளம்பரம்

*1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆவணி (ஓகத்து) மீ 20 ந் உ.

## 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத். 460) 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் த சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

பின்வரும் எல்லைகளுக்குட்பட்டுள்ளனவும், மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பஸ்துன்கோறளே கிழக்கில், கங்கபொட பத்துவ பிரிவுக்காரியாதிகாரியின் பிரிவில், 819 ம் இலக்க மகாகம தெற்கு கிராம சேவையாளர் பிரிவில், மகாகம தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள தொடங்கஹவத்தை, தொடங்கஹவத்தை உடக்கட்டிய என்றழைக்கப்படும் காணிகளிலிருந்து இரண்டு காணித் துண்டுகள் :—

1. தொடங்கஹவத்தை இ.கி.ப. 134 இல் 417 ம் துண்டின் ஒருபகுதி—விசாலம் 16 பேர்ச்சுகள்.

வடக்கு : அதே காணியின் ஒரு பகுதி ;
கிழக்கு : தொடங்கஹவத்தை—இ.கி.ப. 134 இல் துண்டு இல. 418 ;
தெற்கு : அதே காணியின் ஒரு பகுதி ;
மேற்கு : இ.கி.ப. 403 ம் காணித் துண்டு (முடி) .

2. தொடங்கஹவத்தை உடக்கட்டிய—இ.கி.ப. 134 இல் 418 ம் துண்டின் ஒரு பகுதி—விசாலம் சுமார் 24 பேர்ச்சுகள்.

வடக்கு : அதே காணியின் ஒரு பகுதி ;
கிழக்கு : அகலவத்தையிலிருந்து அத்துறைக்குச் செல்லும் பகிரங்க தெரு ;
தெற்கு : அதே காணியின் ஒரு பகுதி ;
மேற்கு : இ.கி.ப. 134 இல் 417 ம் இலக்க துண்டின் ஒரு பகுதி.

குறிப்பு இல. ஜே 63/64 எல் 1119 (வீச) இஅ/3/129.

சீ. பீ. த சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு யூலை மீ 27 ந் உ.

8—531—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## 1964 ம் ஆண்டின் காணி எடுத்தற் சட்டம் (திருத்தம்) 28 ஆல் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் (அத்தியாயம் 460) ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சார்ள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

1. கொழும்பு மாவட்டம், சியன கோறளே கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு, பசயாலயில் இஹலவெல என்னும் காணியில் சுமார் 11·5 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக்கொண்ட ஒரு பகுதி :—

வடக்கு : இதே காணியின் ஒரு பகுதி, உரிமைகேட்பது ஆர். ஏ. பிரேமரட்ண (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
கிழக்கு : கொழும்பு-கண்டிப் பிரதான வீதி ;
தெற்கு : பண்டாரவத்தை என்னும் காணி, உரிமைகேட்பது தேமானிஸ் ;
மேற்கு : இதே காணியின் மிகுதிப் பகுதி.

2. கொழும்பு மாவட்டம், சியன கோறளே கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு, பசயாலயில் இஹலவெல என்னும் காணியில் சுமார் 3·25 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக் கொண்ட ஒரு பகுதி ;

வடக்கு : இதே காணியின் ஒரு பகுதி, உரிமைகேட்பது ஜே. எம். பீ. திஸ்ஸாநாயக்க (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
கிழக்கு : கொழும்பு-கண்டிப் பிரதான வீதி ;
தெற்கு : இதே காணியின் ஒரு பகுதி , உரிமைகேட்பது பீ. எஸ். சுபசிங்க (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
மேற்கு : இதே காணியின் ஒரு பகுதி.

3. கொழும்பு மாவட்டம், சியனக் கோறளே கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு, பசயாலயில், இஹலவெல என்னும் காணியில் சுமார் 14·75 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக் கொண்ட ஒரு பகுதி :—

வடக்கு : அதே காணியின் ஒரு பகுதி, உரிமைகேட்பது எம். பீ. ஏ. சமரசிங்க (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
கிழக்கு : கொழும்பு-கண்டி பிரதான வீதி ;
தெற்கு : அதே காணியின் ஒரு பகுதி, உரிமைகேட்பது ஆர். ஏ. பிரேமரட்ண (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
மேற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி.

4. கொழும்பு மாவட்டம், சியனக் கோறளே கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு, பசயாலயில் இஹலவெல என்னும் காணியில் சுமார் 1·25 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக் கொண்ட ஒரு பகுதி :—

வடக்கு : அதே காணியின் ஒரு பகுதி, உரிமைகோருவது டபிள்யு. விஜயபாகு விஜேசிங்க (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
கிழக்கு : கொழும்பு-கண்டிப் பிரதான பாதை ;
தெற்கு : அதே காணியின் ஒரு பகுதி, உரிமைகோருவது ஜே. எம். பி. திஸ்ஸாநாயக்க (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது) ;
மேற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி.

5. கொழும்பு மாவட்டம், சியனக் கோறளே கிழக்குப் பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவு, பசயாலயில், இஹலவெல என்னும் காணியில் சுமார் 6·75 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக் கொண்ட ஒரு பகுதி :—

வடக்கு, மேற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ;
கிழக்கு : கொழும்பு-கண்டிப் பிரதான பாதை ;
தெற்கு : அதே காணியில் ஒரு பகுதி, உரிமைகேட்பது எம். பி. ஏ. சமரசேன (எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது).

குறிப்பு இல. J 64/65 T 176/QC 329/K.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆடி மாதம் 29 ம் உ.

8-610—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

## 1964 ஆம் ஆண்டின் 28 இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 5 பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

குருநாகல் மாவட்டம், பன்னல பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதி கடுகம்பொல ஹத்பத்து, கந்தப்பொல பலாத்த, கல்லஹமுல்ல கிராமத்தில் அமைந்திருக்கும் தெல்கஹாவத்த என்னும் காணியில் ஏறக்குறைய 3ஏ. 0று. 00பே. விசாலமுள்ள பகுதி பின்வரும் எல்லைகளைக் கொண்டவை :—

வடக்கு : அதே காணியின் மிகுதிப்பாகம் ;

கிழக்கு : குரு/கல்லஹமுல்ல பாடசாலைக் காணியாலும் ஜே. எச். பபாசிங்கோவாலும் உரிமை கோரப்படும் தெல்கஹாவத்த ;

தெற்கு : உதுருவெலயில் இருந்து துதிரிபிற்றியாவுக்குப் போகும் கிராமச்சங்க றேட் ;

மேற்கு : அதே காணியின் மிகுதிப்பாகம்.

குறிப்பு இல. ஜே 63/64 ா 1113-3/62/247
கொழும்பு,
1965 ம் ஆண்டு யூலை மீ 29 ந உ.

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

8—565—20.8.65ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## 1964 ம் ஆண்டின் காணி எடுத்தற் சட்டம் (திருத்தம்) 28 ல் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அச்சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் டி சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு மாவட்டம், அளுத்குறு கோறளை தெற்கு, வத்தளை—மாபோலே நகரசபை எல்லைக்குள், நீர்கொழும்பு-கொழும்பு பீ. டபிள்யு டீ. றேட்டில் மதிப்பீட்டு இல. 367 க் கொண்ட டியுல்ககாவத்தை என்னும் காணியில் சுமார் 1·5 பேர்ச்சஸ் விசாலமான கீழ்வரும் எல்லைகளைக் கொண்ட ஒரு துண்டுக் காணி.

வடக்கு, மேற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதி ;

கிழக்கு : கொழும்பு—நீர்கொழும்பு பீ. டபிள்யு. டீ. றேட் ;

தெற்கு : அதே காணியின் மிகுதிப் பகுதியும் முடிக்குரிய நிலமும்.

குறிப்பு இல. J 63/64 LG 1200 QA 831.
கொழும்பு, 1965 ம் ஆண்டு ஆடி மீ 2 ந உ

சீ. பீ. டி சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

8–563—20.8.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,486

---

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர் சாள்ஸ் பேசிவல் த சில்வா ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

பின்வரும் எல்லைகளுக்கு உட்பட்டுள்ளவும், களுத்துறை மாவட்டத்தில், றைகம் கோறளையில், மில்லாவைக் கிராம சேவையாளர் பிரிவில், மில்லாவைக் கிராமத்தில் அமைந்துள்ள கறகமண்டியஹேனே என்றழைக்கப்படும் காணியிலிருந்து சுமார் 72 பேர்ச்சுகள் விசாலமுள்ள 1 ம் இலக்கத் துண்டும், சுமார் 08 பேர்ச்சுகள் விசாலமுள்ள 2 ம் இலக்கத் துண்டும்.

துண்டு இல. 1—வடக்கு : பாடசாலைக் காணியும், ஹொறணை—பாதுக்கை ப.வே.ப. தெருவும் ;
கிழக்கு : பாடசாலைக் காணியும், கொறக்கஹகும்புறவும் ;
தெற்கு : கொறக்கஹகும்புற ;
மேற்கு : டீ. எஸ். திலகரத்னவால் உரிமை கூறப்படும் காணியும் கொறக்கஹகும்புறவும்.

துண்டு இல. 2—வடக்கு : ஏ. சீ. சந்திரசேகராவால் உரிமை கூறப்படும் காணி ;
கிழக்கு : கொறக்கஹகும்புறவும், ஏ. சீ. சந்திரசேகராவால் உரிமை கூறப்படும் காணியும் ;
தெற்கு : கொறக்கஹகும்புறவும், பாடசாலைக் காணியும் ;
மேற்கு : பாடசாலைக் காணி.

குறிப்பு இல. ஜே. 63/64 ஈ. 904—இஅ/2/79.
கொழும்பு, 1965 ம் ஆண்டு யூலை மீ 29 ந உ.

சீ. பீ. த சில்வா,
காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சர்.

8-662—20.8.65 ந திகதிய வர்த்தமானி இல. 14,486

QD 153.

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் .460)

### 7 ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பபட இல. கொ. 48. கிராமம் : பட்டலகெதற (பகுதி)

| துண்டு இல. | காணிப் பெயர் | விபரம் | உரிமைகோருபவர் பெயர் | விபரம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | பாம்குறுவ் தோட்டம் அல்லது போலவத்தை | 30–50 வருட 68 தென்னை மரம் கொண்ட தென்னந் தோட்டம் | K. A. அறனேலிஸ் அப்புகாமி, பட்டல கெதற, வியாங்கொடை | 1 0 04·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் உறுதிநிலைநாட்டும் சாசனங்களுடன் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1965 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6 ந் தேதி மு. ப. 9.30 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 29 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கொழும்புக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆவணி மீ 5 ந் உ.

A. E. பண்டிதறட்ன,
மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

8–640—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

எமது. இல. எல் எ/24.

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன். மட்/ஒலுவில் அக்கரை அரசாங்க முஸ்லீம் கலவன் பாடசாலை.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்.—

கீழே சொல்லப்பட்ட காணிகள் கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்டத்திலே அக்கரைப் பற்றுக் காரியாதிகாரியின் பகுதியில் ஒலுவில் கிராமத்தில் உள்ளது.

| துண்டு இல. | காணியின் பெயர் | காணியின் விபரம் | உரிமைகோருபவர்களின் பெயர்களும் விலாசமும் | விஸ்தீரணம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | அக்கரை வேம்புப்பூமி .. | 15 வருட வயது கொண்ட 2 வேம்பு மரங்கள், கிடுகினால் வேயப்பட்டதும் களியினால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடத்தையும் கொண்டுள்ள வளவு | திரு. அவக்கர்போடி இஸ்மாலெவ்வை, ஒலுவில் | 0 0 15·2 |
| 2 | அக்கரை வேம்புப்பூமி .. | 15 வருட வயது கொண்ட 2 வேம்பு மரங்கள், கிடுகினால் வேயப்பட்டதும் களியினால் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடத்தையும் கொண்டுள்ள வளவு | திரு. கலந்தர் உதுமாலெவ்வை, ஒலுவில் | 0 0 08·1 |
| | | | | 0 0 23·3 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1965 ம் வருடம் ஐப்பசி மாதம் 12 ந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அக்கரைப்பற்று காரியாதிகாரியின் காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத்தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் வருடம் ஐப்பசி மாதம் 5 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விசாரணையின்போது எனது முன்னிலையில் உரிமைகோருவதற்கு உடந்தையாகவுள்ள எல்லா உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் காட்டவேண்டும்.

கச்சேரி, அம்பாரை,
1965 ம் ஆண்டு ஆவணி மீ 10 ந் உ.

ஆர். ஜி. ஜி. ஒ. குணசேகர,
அரசாங்க அதிபதி, அம்பாரை மாவட்டம்.

8–660—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

QB 614.

## 1964 ம் ஆண்டின் காணி எடுத்தற் சட்டம் (திருத்தம்) 28 ஆல் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின்(1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பபட இல. கொ. 52. கொழும்பு மாவட்டம், காபிற்றிகம் கோறளை காரியாதிகாரியின் பிரிவு உடுககாபத்தில் படடலியா கிராமம்.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமை கேட்பவர் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | மறககாவத்தை .. | 5-25 வருட 107 தென்னை, 12 வருட 1 பலா, 12 வருட 20 பாக்கு மரங்கள் கொண்ட தென்னந்தோட்டம் | G. M. H. W. பெரேரா படடலியா | 1 0 17·5 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1965 ம் ஆு புரட்டாசி மாதம் 24 ந் தேதி மு. ப. 9.30 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆு புரட்டாசி மாதம் 15 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். உறுதியும் சாசனங்களும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்புக் கச்சேரி,
1965 ம் ஆு ஆவணி மீ 5 ந உ.

A. P. B. மானம்பேரி,
மாவட்ட மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

8-442—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

RQ 446.

## 1964 ம் ஆண்டின் காணி எடுத்தற் சட்டம் (திருத்தம்) 28 ஆல் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின்(1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

ஆரம்பபட இல. கொ. 67. இடம் : கொழும்பு மாவட்டம், கொழும்பு காரியாதிகாரியின் பிரிவு. கொழும்பு மாநகரசபை எல்லைக்குள், மில்ல கிரியாவில் 39 ம் வட்டாரம்.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமை கோருபவர் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | பம்பலப்பிட்டிய, காலி றோட் ம. இ. 123 க் கொண்டுள்ள பழைய கதிரேசன் இந்துக் கோவிலில் ஒரு பகுதி | 1-40 வருட 43 தென்னை, 10 வருட 1 பிலா, 5-15 வருட பாக்கு, 2-10 வருட வேம்பு, 30 வருட அரசு, 5-10 வருட சப்பு, 5-10 வருட ஜம்புநாரத்தை மரங்களுடன் ஒரு பகுதிக் கட்டிடச்சுவரையும் கொண்ட தோட்டம் | பழைய கதிரேசன் இந்துக் கோவில் பிரதம நம்பிக்கைப் பொறுப்பாளர் : ஆர். எம். ஏஆர். ஏஆர். வீஆர். வீரப்ப செட்டியார், 245, செட்டித் தெரு கொழும்பு 11 | 1 0 00·50 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1965 ம் ஆு ஐப்பசி மாதம் 8 ந் தேதி மு. ப. 9.30 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆு புரட்டாசி மாதம் 30 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கொழும்புக் கச்சேரி,
1965 ம் ஆு ஆவணி மீ 7 ந உ.

H. M. Z. பாறூக்,
மாவட்ட மேலதிக அரசாட்சி ஏசண்டு.

8-441—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

குறிப்பு இல. 2/42/91.

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

இடம் : சப்ரகமுவ மாகாணம், கேகாலே மாவட்டம், பெலிகல் கோறளே, அம்பே கிராமத்தில் உள்ளது.

படத்தின் இலக்கமும் துண்டு இலக்கமும் :—துண்டு இல. 1. படத்தின் இல. கே14. பீ

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமை கோருபவர் | விஸ்தீரணம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | அம்பேவத்தை | .. இத்தோட்டத்தில் 60-70 வருடத்து 141 தென்னைகளும், 40-50 வருடத்து 69 ரப்பர் மரங்களும், 10-15 வருடத்து 19 கமுகு மரங்களும், 10-15 வருடத்து 5 தோடைகளும், 8-10 வருடத்து 16 கோப்பி மரங்களும் ஒரு மண் கிணறும் உண்டு | அலெக்ஸ்சான்டர் ஜோரானியஸ் பீரிஸ், பற்ற கெற்றர, மடபற்ற | 1 3 38·0 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ந் தேதி காலை 10.00 மணிக்கு கேகாலைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கேகாலைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 10 ந உ.

டீ. எம். வித்தாச்சி,
உதவி அரசாங்க அதிபர், கேகாலை மாவட்டம்.

8-551—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

இல. இஅ/2/37.

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின் படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளே, உடுகஹ பத்துவ, இங்கிரியா கிராமம்—பிரதம பட இல. க 4 இல் துண்டுகள் 1 ம், 2ம்

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளர் பெயர் | விசாலம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | பீப்லண்ட வத்தை | .. 25-50 வயதுள்ள 51 தென்னை மரங்களையும், 2-3 வயதுள்ள 18 தென்னம் பிள்ளைகளையும், 2-5 வயதுள்ள 5 இனிகுரு மரங்களையும், சுமார் 25 வயதுள்ள 1 மா மரத்தையும், 10 வயதுள்ள 1 கோப்பி பற்றையையும், சுமார் 2 வயதுள்ள 1 கமுகம் பிள்ளையையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | ஈ. எம். ஏ. பெருனுண்டோ, இல. 46, உயனே தெரு, மொறட்டுவை | 0 3 38·5 |
| 2 | ஷை | .. 2 கொய்யா மரங்களையும், 2-3 வயதுள்ள 2 இனிகுரு மரங்களையும், சுமார் 12 வயதுள்ள 1 நம்புட்டான மரத்தையும், சுமார் 5 வயதுள்ள 1 கோப்பி பற்றையையும் கொண்டுள்ள தோட்டம் | ஈ. எம். ஏ. பெனுண்டோ, இல. 46, உயனே தெரு. மொறட்டுவை, என்பவருக்கும் இங்கிரியாவைச் சேர்ந்த கங்கானம்கே மல்லிகா என்பவருக்கும் பிணக்குண்டு | 0 0 01·2 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ந் தேதி மு. ப. 10.30 மணிக்கு ஹொறணை பிரிவுக் காரியாதிகாரி அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்க பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந உ.

பீ. சீ. சந்திரதாஸ,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

8-546—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

இல. 3/62/193—ஜே 63/64 எ. 121

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பன்னல பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதி கடுகம்பொல ஹத்பத்து, மெதபத்து கோரலே கிழக்கு, ஹமங்கள்ள கிராமம்: 388 ம் இறுதி கிராமப்படத்தில் 3 ம் இணைப்படம்.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளரின் பெயர் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 80 | எகத்துகஹாமுலஹேன.. | 18 வருஷமுள்ள 1 கித்துல் மரமும், 50 வருஷமுள்ள 1 கொரக்கா மரமும், 4–8 வருஷமுள்ள 22 தென்னை மரங்களும், 20–30 வருஷமுள்ள 17 தென்னைமரங்களும் அடங்கிய தென்னந் தோட்டம் | திருமதி. எஸ். டி. விமலாவதி, கமங்கள்ள, நாரங்கொட | 0 3 21 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ந் தேதி காலை 10.30 மணிக்கு குருநாகல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

லொ. ப. உதலாகம,
உதவி அரசாட்சி ஏசண்டு,
குருநாகல் மாவட்டம்.

குருநாகல் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 9 ந உ.

8–548—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

குறி. இல. : எல். டீ./டீ. 116

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், கண்டி கிரவட்ஸ் பிரிவு அதிகாரியின் பகுதி, கங்கவட்ட கோரளை, போவல கிராமத்திலுள்ள, மவுண்ட் பெலசண்ட் தோட்டம் எனப்படும் காணியில் 0 ஏ. 2 று. 00.0 பேர். விசாலமுள்ள ஒரு துண்டுக்காணி. இக் காணியை அளவைசெய்யப்பட்டு பிரதமப் படம் மஹ 16 ல் துண்டு 1 என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் | விசாலம் |
|---|---|
| பி. பீ. என். கொடமுன்ன | போவலவத்த, கண்டி |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ந் தேதி காலை 10.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் மும்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் எதும் சாதனங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத்தொகையை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

எஸ் மாரலந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

கண்டி கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 13 ந உ.

8–116—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

இல. 3/62/95 / ஜே 57/58 எல்ஜி 373.

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 33 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர், லொக்கு பண்டர் உதலாகம ஆகிய நான் காணி கொள்ளும் சட்டத்தின் மேற்குறிப்பிட்ட பிரிவின்படி கீழ் குறிக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு நஷ்ட ஈடும் வட்டியும் ரூபா அறு நூற்று எண்பத்துநாலு சதம் எண்பத்து ஏழும் (684.87) உரிமையுள்ளவர்கள் பெற்றுக்கொள்ளும்படியாக குருநாகல் டிஸ்திறிக் கோட்டில் வழக்கு இல. 691/எல். ஏ. சார்பாக செலுத்தியிருப்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

லொ. ப. உதலாகம,
உதவி அரசாங்க அதிபர், குருநாகல் மாவட்டம்.

கச்சேரி, குருநாகல்,
1965 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 13 ந உ.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வேவுடவில்லி ஹத்பத்துவ, குருநாகல் மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் இலுப்புகெதர என்னும் கிராமத்தில் இருக்கும் கந்துபொடகஹாமுலஹேன, மதிப்பீட்டு இல. 1, சுமங்கல மாவத்த என்னும் காணி ஏறக்குறைய 0 ஏ. 0 று. 04·4 பே. விசாலமுள்ள ஒரு துண்டு. மேல் அதிகமான விபரங்கள் ஏ. 1,597 ம் பிரதம படத்தில் 1 ம் துண்டில் உள.

8–707—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

இல. இஅ/4/4.

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (460 ம் அத்தியாயம்) காணி எடுத்தற் சட்டம்

### 7 ம் பிரிவின்கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட (460 ம் அத்தியாயம்) காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே, மகாகம்மத்த கிராமம். பிரதம பட இல. எ. 4581 இல் துண்டுகள் 1—13.

| துண்டு | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளர் பெயர் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | பட்டியவத்தை | .. 35 வயதுள்ள 1 தென்னை மரத்தையும், 15 வயதுள்ள 2 தென்னை மரங்களையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | திருமதி. அலென் சேனசிங்க, மகாகம் மத்த, பையாகலை | 0 0 01·8 |
| 2 | ஷை | .. 35 வயதுள்ள 14 தென்னை மரங்களையும், 15 வயதுள்ள 1 தென்னை மரத்தையும், 35 வயதுள்ள 1 மா மரத்தையும், 35 வயதுள்ள 1 ஈரப்பலா மரத்தையும், 15 வயதுள்ள 17 கமுக மரங்களையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | ஷை .. .. | 0 0 28·9 |
| 3 | மகாகெதறவத்தை | .. 5 வயதுள்ள 3 கமுகமரங்களைக் கொண்டுள்ள ஒவிற்ற .. | டீ.எச். புஞ்சிஹெட்டி, மகாகம்மெத்த, பையாகலை | 0 0 06·3 |
| 4 | ஷை | .. ஒவிற்ற .. .. .. | எச். டீ. டேவிட், மகாகம்மெத்த, பையாகலை | 0 0 03·3 |
| 5 | ஷை | .. தோண்டப்பட்டுள்ள தற்காலிக கிணறு ஒன்றைக் கொண்டுள்ள ஒவிற்ற | டீ. எப். வீரக்கோன், டீ. எச். புஞ்சி ஹெட்டி, மகாகம்மத்த, பையாகலை | 0 0 04·0 |
| 6 | பட்டியவத்தை | ... 35 வயதுள்ள 85 தென்னை மரங்களையும், 15 வயதுள்ள 2 தென்னை மரங்களையும், 10 வயதுள்ள 25 தென்னை மரங்களையும், 5 வயதுள்ள 1 தென்னம் பிள்ளையையும், 20 வயதுள்ள 1 மா மரத்தையும், 15 வயதுள்ள 1 றம்புட்டான் மரத்தையும், 20 வயதுள்ள 6 ஈரபபலா மரங்களையும், 35 வயதுள்ள 1 பலா மரத்தையும், 20 வயதுள்ள 1 பலா மரத்தையும், 25 வயதுள்ள (3 அடிச்சுற்று) 1 ஹல்மில்ல மரத்தையும்கொண்டுள்ள தென்னந் தோட்டம் | டபிள்யூ. எப். விக்கிரமசிங்க மகாகம் மெத்த, பையாமலை | 0 3 28·9 |
| 7 | ஷை | .. தென்னந்தோட்டம் (பயிர் இல்லை) .. .. | ஷை .. | 0 0 00·2 |
| 8 | கொஸ்பணவத்தை | .. 35 வயதுள்ள 13 தென்னை மரங்களையும், 3 வயதுள்ள 1 தென்னம்பிள்ளையையும், 10 வயதுள்ள 1 மா மரத்தையும், சீமேந்து அத்திவாரமொன்றையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | டபிள்யு. எப். விக்கிரமசிங்க, மகாகம் மெத்த, பையாகலை, திருமதி.எஸ். ஆர். குணவர்தன, 15/3, கவர் தெரு, கொழும்பு 5, டீ. ரூபசேனு, மகாகம்மெத்த, பையாகலை | 0 0 28·4 |
| 9 | ஷை | .. 35 வயதுள்ள 1 தென்னை மரத்தைக் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | ஷை .. .. | 0 0 06·1 |
| 10 | வேகவத்தை | .. தென்னந் தோட்டம் (பயிர் இல்லை) .. .. | திருமதி எஸ். ஆர். குணவர்த்தன, ஜீ. ஆர். குணவர்தன, ரஞ்சித் குணவர்தன, எல்லோரும், 15/3, கோவர் தெரு, கொழும்பு 5 | 0 0 01·7 |
| 11 | ஷை | .. 35 வயதுள்ள 7 தென்னை மரங்களையும், 3 வயதுள்ள 3 தென்னம் பிள்ளைகளையும், 15 வயதுள்ள 2 பலா மரங்களையும், 35 வயதுள்ள 1 ஈரப்பலா மரத்தையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | ஷை .. | 0 0 28·6 |
| 12 | ஷை | .. தென்னந் தோட்டம் (பயிர் இல்லை) .. .. | திருமதி. டீ. எச். சமரநாயக்க, திருமதி. டீ. ஜே. விஜேவிக்கிரம, தானுவத்தை, பையாகலை, டீ. ஏ. செனெவிரத்ன, தபால் கந்தோர் தலைவர், பையாகலை | 0 0 01·1 |
| 13 | ஷை | .. 35 வயதுள்ள 9 தென்னை மரங்களையும், 25 வயதுள்ள 2 தென்னை மரங்களையும், 35 வயதுள்ள 2 ஈரப்பலா மரங்களையும், 10 வயதுள்ள 1 தொம்ப மரத்தையும், 15 வயதுள்ள 1 கமுக மரத்தையும் கொண்டுள்ள தென்னந் தோட்டம் | ஷை .. | 0 0 28·4 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ௵ ஒக்டோபர் மாதம் 6 ந் தேதி மு. ப. 10.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ௵ செப்டெம்பர் மாதம் 28 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தங்களின் உடந்தைகளை நிரூபிக்கக்கூடிய உறுதிகளையும், மற்றும் அத்தாட்சிப் பத்திரங்களையும் என்னிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

பீ. பீ. சந்திரதாஸ,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

களுத்துறைக் கச்சேரி,
1965 ம் ௵ ஆகஸ்டு மீ 7 ந் உ.

8-547—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

குறி.இல.எல்பீ/பீ 103

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்து கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், பாத்ததும்பர பிரிவு அதிகாரியின் பகுதி, உடகம்பஹ கோரளே, மடவல மடிகே கிராமத்திலுள்ள, உருகன்ஹுவத்த எனப்படும் காணியின் 0 ஏ. 0 று. 10·9 பே. விசாலமுள்ள ஒரு துண்டு காணி. இக் காணியை அளவைசெய்யப்பட்டு பிரதமப் படம் மஹ 28 ல் துண்டு 1 என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் | விலாசம் |
|---|---|
| கனம் எம். ஏ. எஸ். மரிக்கார், பிறக்டர், சுபிரிம் கோர்டு, பிரசித்த நொத்தாரிசு .. .. | திருகோணமலை வீதி, கண்டி. |
| கனம் எஸ். எம். ஓ. மரிக்கார் .. .. .. .. | மடவல மடிகே, மடவல பஜார் |
| கனம் எஸ். எம். ஏ. ஜப்பார் .. .. .. .. | மடவல மடிகே, மடவல பஜார் |
| திருமதி எஸ். எம். ஜெகுபார் .. .. .. .. | மடவல மடிகே, மடவல பஜார் |
| கனம் கே. அப்துல் ரஷீட் .. .. .. .. | மடவல மடிகே, மடவல பஜார் |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆடு ஒக்டோபர் மாதம் 15 ந் தேதி காலை 11 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆடு ஒக்டோபர் மாதம் 8 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் ஏதும் சாதனங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத்தொகையை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1965 ம் ஆடு ஆகஸ்ட்டு மீ 13 ந் உ.

எஸ். மாரலந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

8–646—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

குறி. இல. எல்டீ/பீடீ. 127

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

கண்டி மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரிவு அதிகாரியின் பகுதி, அம்பகமுவ கோரளே, ஹட்டன் டிக்ஓயா நகர சபையின் வட்டார இல. 7 ல் உள்ள தரவெல்ல பகுதியில், டிக்ஓயா (பகுதி) கிராமத்திலுள்ள, தரவெல்ல ரோட்டிலுள்ள வரிப்பண இல. 52–58 தொண்ட தரவெல்ல தோட்டம் எனப்படும் காணியில் ஏ. 0, று. 0, பே. 07·20 விசாலமுள்ள ஒரு துண்டு காணி. இக் காணியை அளவைசெய்யப்பட்டு பிரதமப் படம் மஹ 30 ல் துண்டு 1 என விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

| காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் | விலாசம் |
|---|---|
| த என்கலோ சிலோன் என் ஜெனரல் எஸ்டேட்ஸ் கம்பெனி லிமிடெட் | ஏஜண்ட்ஸ் :—பொயிஸ் பிரதர்ஸ் என் கம்பெனி லிமிடெட், நி. 59, குவீன் தெரு (Queens Street), கொழும்பு |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆடு ஒக்டோபர் மாதம் 15 ந் தேதி காலை 9.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆடு ஒக்டோபர் மாதம் 7 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் ஏதும் சாதனங்களையும் கேட்கப்படும் நட்ட ஈட்டுத்தொகையை நியாயமானதென நிரூபிக்கக்கூடிய சாதனங்களையும் விசாரணையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

கண்டிக் கச்சேரி,
1965 ம் ஆடு ஆகஸ்ட்டு மீ 5 ந் உ.

எஸ். மாரலந்த,
கண்டி மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டு.

8—618—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

இல. இஅ/2/15

## 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ம் பிரிவின்படியான அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோறளை, உடகஹ பத்துவ, அரக்கவிலைக் கிராமம்—பிரதம பட இல. க 2 இல் துண்டு இல. 1.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரம் | உரிமையாளர் பெயர் | விசாலம் ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 1 | ஹிக்கஹஹேனே .. | 6–10 வயதுள்ள 132 றப்பர் மரங்களையும், 4–10 வயதுள்ள 4 றப்பர் மரங்களையும், கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் கட்டிடமொன்றையும் கொண்டுள்ள றப்பர்த் தோட்டம் | மல்லிகா ஆராச்சிகே குணவர்த்தன, அரக்கவிலை, ஹந்தப்பான் கொடை | 0 3 20·7 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர்மூலமாக 1965 ம் ஆு செப்டெம்பர் மாதம் 20 ந் தேதி மு.ப. 10 மணிக்கு ஹொறணைக் காரியாதிகாரி அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபெற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 1965 ம் ஆு செப்டெம்பர் மாதம் 13 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

களுத்துறைக் கச்சேரி,
1965 ம் ஆு ஆகஸ்டு மீ 12 ந உ.

பீ. சீ. சந்திரதாஸ,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

8–629—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## வல்கம, மாத்தறை மாவட்டம்—மாத்தறைப் புதிய ஆஸ்பத்திரிக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் உள்ள நிரந்தரப் பயிர்களின் விளைபொருட்களை எடுக்கும் உரிமைக்கான குத்தகை

அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் காணியில் உள்ள நிரந்தரப் பயிர்களின் விளைபொருட்களை 30.8.65 தொடக்கம் 30.8.66 முடியும் வரையுள்ள ஒரு வருட காலத்திற்கு இதன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக எடுக்கும் உரிமைக்கான குத்தகைக் கேள்விகளை (இதனகத்துப் பின்னர் அரசாங்க அதிபர் என்று குறித்துக் காட்டப்படும்) மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபர் ஏற்றுக்கொள்வார் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### நிபந்தனைகள்

1. ஆண்டு குத்தகை இவ்வளவென்று கேள்வி கேட்கப்படவேண்டும். ரூபா 600 க்குக் குறைவான வருடாந்தக் குத்தகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. மாத்தறைக் கச்சேரியிலே பெறக்கூடிய பத்திரங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் முதலில் மாத்தறைக் கச்சேரியில் ரூபா 10 கட்டி அதன் பற்றுச்சீட்டைக் காட்டாதுவிடில், கேள்விப் பத்திரங்கொடுபடமாட்டாது. இத்தொகை விண்ணப்பதாரருக்குக் குத்தகை விற்பனைக்குப் பிறகு திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால், ஒருவர் விஷமத்தனமான கேள்வியைச் செய்தால் அல்லது அக் கேள்வியைச் செய்வதால் அரசாங்கத்திற்கு வீண்செலவும் வசதியீனமும் ஏற்பட்டிருக்கிறதென்று அரசாங்க அதிபர் கருதினால், அக்கட்டுப் பணந் திருப்பிக் கொடுபட மாட்டாது. கேள்விப் பத்திரங்கள் 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் திகதி காலை 10 மணி வரையுங் கொடுபடும். வேறு எவ்விதமான பத்திரத்திலேனுஞ் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

3. " சீல் " செய்யப்பட்டுள்ள உறைக்குள் ஒட்டி " மாத்தறைப் புதிய ஆஸ்பத்திரிக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியிலுள்ள விளைபொருட்களை எடுக்கும் உரிமைக்கான குத்தகைக் கேள்விப் பத்திரம் " என்று அவ்வுறையின் மூலையில் எழுதி அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் மாத்தறைக் கச்சேரியினால் 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ந் திகதி காலை 11 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விக்காரர்கள் தங்கள் கேள்விப் பத்திரங்களை மாத்தறைக் கச்சேரியிலுள்ள " கேள்விப்பத்திரப் பெட்டிகளுள் " போடலாம். அல்லது " அரசாங்க அதிபர், கச்சேரி, மாத்தறை " என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் மாத்தறைக் கச்சேரியில் 1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ந் திகதி காலை 11 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களைத் திறக்கும்பொழுது, கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்பவர்கள் எல்லோரும் தாங்களே நேரில் அல்லது முறைப்படி அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்கள் மூலமாகச் சமூகமளித்துத் தங்கள் கேள்விப் பத்திரங்களை நல்லெண்ணத்துடனேயே சமர்ப்பித்தார்கள் என்பதை அரசாங்க அதிபர் திருப்திப்படும் விதத்தில் காட்ட வேண்டும்.

4. சித்தியடைந்த கேள்விக்காரர், தன்னுடைய கேள்வி ஏற்கப்பட்டதும் தான் கேட்ட கேள்விப்பணத்தை முழுவதுமாக உடனே அரசாங்க அதிபருக்குக் கட்டுதல் வேண்டும். அப்படிக் கட்டத்தவறும் இடத்து, அரசாங்க அதிபர் குறித்த குத்தகை விற்பனையை ரத்துச் செய்து, அக்கேள்விக்காரர் செலுத்திய பணம் எதையும் பறிமுதல் செய்வர்.

5. சித்தியடைந்த கேள்விக்காரர் அரசாங்க அதிபர் கோருமிடத்துக் கேள்வியில் (10%) பத்து வீதத்திற்கு மேற்படாத குத்தகைப் பணத்தைப் பிணையாகக் கட்டுதல்வேண்டும்.

6. கேள்வியின் முழுத்தொகைப் பணத்தையும், 5 ம் பத்தியில் குறிப்பிட்ட பிணைப் பணத்தையுஞ் செலுத்திய பின்பு, சித்தியடைந்த கேள்விக்காரர் கீழே தரப்படும் நிபந்தனைகளுக்கு அமைய ஒரு " லைசென்ஸ் " பெறுவர் :—

(1) " லைசென்ஸ் " ஒரு " கலண்டர் " மாத அறிவித்தலுக்குள் அரசாங்க அதிபரால் நிறுத்தப்படலாம். குறித்த அறிவித்தல் உத்தரவு பெற்றவருக்கு (லைசென்ஸ் பெற்றவர்) நேர்முகமாகவோ அல்லது அவரின் கடைசியாகத் தெரியப்படுத்தப்பட்ட முகவரிக்குப் பதிவு செய்த கடிதமூலம் அனுப்பப்படும். அல்லது, அந்தக் காணியில் பகிரங்கமான இடத்தில் ஒட்டப்படும்.

(2) குறித்த காணி சம்பந்தமாகவுள்ள மதிப்பு வரி, சொத்து வரி ஆகிய சகல வரிகளையும் உத்தரவு பெற்றவரே செலுத்த வேண்டும்.

(3) உத்தரவு பெற்றவர் தம்செலவில் குறித்த நிலத்தில் முடிக்குரிய அடையாளங்களையும், எல்லைகளையும் வரையறை செய்து நல்ல நிலையில் பேணிக்கொள்ளுதல் வேண்டும்.

(4) அரசாங்க அதிபரிடமிருந்து ஏற்கனவே எழுத்துமூலமான அனுமதி பெறாமல் உத்தரவு பெற்றவர் குறித்த காணியிலுள்ள மரங்களில் எதையேனுந் தறிக்கவோ, அகற்றவோ, அம்மரங்களில் எதற்கும் எவ்விதமான தீங்குமோ செய்யக்கூடாது.

(5) அரசாங்க அதிபரிடமிருந்து ஏற்கனவே எழுத்துமூலமான அனுமதி பெறாமல் உத்தரவு பெற்றவர் குறித்த காணியிலிருந்து எந்த அளவு மண்ணுமோ, கிறவலுமோ அகற்றக்கூடாது.

(6) அரசாங்க அதிபரிடமிருந்து ஏற்கனவே எழுத்து மூலமான அனுமதி பெறாமல், உத்தரவு பெற்றவர் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ கட்டிடங்களோ நிருமாணிப்புகளோ அமைக்கக்கூடாது.

(7) காணிக் கமிஷனரிடமிருந்து ஏற்கனவே எழுத்து மூலமான அனுமதி பெறாமல், உத்தரவு பெற்ற தமது குத்தகையைச் சாட்டுதல் செய்யக்கூடாது. அல்லது கீழ்க் குத்தகை கொடுக்கக் கூடாது. அக்குத்தகையிலுள்ள தமது சொந்தத்தை வேறு விதமாகப் பைசல் செய்யக்கூடாது.

(8) காணியில் விளைபொருட்களைக் கவனிக்கும் ஒழுங்குகளையும் அல்லது நெருப்பால் அல்லது வேறுவிதத்தில் விளைபொருட்களை நாசமாக்குவதைத் தடுக்கும் ஒழுங்குகளையும் உத்தரவு பெற்றவரே செய்யவேண்டும். இவற்றால் நேரும் நட்டங்களின் பொருட்டு, எந்த விதமான நட்டஈடுக்கோரிக்கையும் அவர் செய்யமுடியாது.

(9) தேங்காய் பிடுங்கல், நிலத்தைப் பண்படுத்தல், பயிர் செய்தல், பேணல், களைபிடுங்கல், புனர் நடுகை ஆதியன சம்பந்தமான எல்லாக் கருமங்களையும், உத்தரவு பெற்றவர் சரியான விவசாய முறைப்படி அரசாங்க அதிபர் திருப்திப்படும் விதத்தில் செய்ய வேண்டும்.

(10) அரசாங்க அதிபரோ, அவர் முறைப்படி அதிகாரம் அளித்துள்ள உத்தியோகத்தர் எவருமோ எந்த நேரமாவது காணிக்குட் சென்று பரிசோதிக்க உத்தரவு பெற்றவர் விடவேண்டும்.

(11) இக்காணி முழுவதுமோ, அதன்ஒரு பகுதியோ குத்தகைக் காலம் முடியுமுன் அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டால், உத்தரவு பெற்றவர், ஒரு மாத எழுத்துமூலமான அறிவித்தலின் பேரில் அப்படியான பகுதியையோ முழுக் காணியையோ, அரசாங்க அதிபருக்குக் கையளிக்க வேண்டும். அப்படியாக நிகழுமிடத்து உத்தரவு பெற்றவர் தாம் ஏற்கனவே செலுத்திய குத்தகைப் பணத்தில் பரிமாணப்படி திருப்பிப் பெறுதற்கும், குத்தகை முடியாத காலத்திற்குச் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தில் குறைத்துக் கொடுப்பதற்கும் அருகராவர்.

(12) குத்தகை நிபந்தனையில் எதனையேனும் உத்தரவு பெற்றவர் எவ்விதத்திலேனும் மீறினால், அரசாங்க அதிபர் எந்தவிதமான நட்டஈடுங் கொடுக்காமல் குறித்த காணியின் ஆட்சியை உடனே எடுப்பதற்கும் உத்தரவு பெற்றவர் செலுத்திய பிணைப்பணம் முழுவதையுமோ, அதன் ஒரு பகுதியையோ பறிமுதல் செய்வதற்கும் அரசாங்க அதிபருக்கு அருகதையுண்டு.

(13) காணியிற் செய்த திருத்தங்களின் பொருட்டோ, வேறு காரணத்தின் பொருட்டோ அரசாங்கத்திடமிருந்து உத்தரவு பெற்றவர் நட்டஈடு பெறமுடியாது.

(14) குத்தகை காலத்தின் பொழுது குத்தகையைத் திருப்பிக் கொடுக்க இயலாது.

7. கேள்விப் பத்திரங்களில் எதனையுமோ, அவை முழுவதையுமோ நிராகரிக்கும் உரிமை அரசாங்க அதிபருக்குண்டு.

8. குத்தகைபற்றியதும், கேள்விப்பத்திர நிபந்தனைகள் பற்றியதுமான மேலதிக விபரங்களை மாத்தறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

மாத்தறைக் கச்சேரி,
1965 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 12 ந் உ.

எப். வீ. பீற்றர்ஸ்,
அரசாங்க அதிபர், மாத்தறை மாவட்டம்.

## அட்டவணை

மாத்தறை மாவட்டத்திலுள்ள வெல்லபொட பத்தும் நாலு கிறவற்ஸ் காரியாதிகாரி பிரிவில், வல்கம என்ற கிராமத்தில் உள்ள கஹம்பல குறுந்துவத்தை அல்லது நரோட குறுந்துவத்தை என்று கூறப்படும் 29 ஏக்கர் 2 றூட் 0 பேர்ச்சஸ் விசாலம் கொண்ட முடிக்குரிய காணியின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : இ. ச. வீதி ;

கிழக்கு : சரப்புகேவத்த என்று சொல்லப்படுங் காணி ;

தெற்கு : தெவுந்தர வாசிகளான திரு. லியனகே மென்டிஸ் சில்வாவும், மறுபேரும் உரிமைகோரும் நரோட குறுந்துவத்தை என்ற காணியும், திரு. டீ. எல். எம். சில்வா உரிமை கோரும் கொறககஹவத்தை என்ற காணியும், வெல்லபொட-வல்கம பஞ்சாயத்து வேலைப் பகுதித் தெருவும் ;

மேற்கு : பின்தேனிய அல்லது கோவிலுக்குப் போகுந் தெரு அல்லது அவெனியூ.

8–444—20.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,486

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.